**இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஈரோடு**

**O.S.No.57/2017**

2020 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-**ம்**தேதி வாசா.2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி **திருமதி.கே.சுதா, பி.எஸ்சி.,எம்.எல்., இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிபதி** என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | **திரு.ஆர்.தனராசு** | ஜாதி |
| த/க. பெயர் | | மதம் |
| கிராமம் | | தொழில் |
| தாலுக்கா | | வயது |
| மாவட்டம் | | |

**முதல் விசாரணை ..**

எனக்கு இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்காக எங்கள் ஈரோடு காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வான்செய்தியின் அடிப்படையில் நான் இன்று சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். 18.6.2015 அன்று என்.பழனிசாமி, த/பெ.நாச்சிமுத்து சார்பில் 40 நபர்கள் கையெழுத்திட்ட EICT பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் ஸ்ரீராமநாதன் பொறியியல் கல்லூரி, திருப்பூர் மற்றும் நாராயணசாமி கல்வி அறக்கட்டளை, ஈரோடு ஆகிய இடங்களில் தாளாளர் மற்றும் தலைவர் அமரர் திரு.பூவராகவன் மற்றும் அவரது மனைவி மகேஸ்வரி பூவராகவன், தற்போதைய தாளாலர் ஆகியோர்களுக்கு கடன் கொடுத்தது சம்பந்தமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுக்கப்பட்ட புகார் என்னுடைய விசாரணைக்கு அனுப்பப்பட்டு, அதில் நான் விசாரணை மேற்கொண்டேன். அதில் நான் 20.06.2015 அன்று மனுதாரர் சார்பில் முத்துவேல், கிருஷ்ணமூர்த்தி, செந்தில்குமார், செல்வராஜ் உள்ளீட்டவர்களையும் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் நந்தகுமார்,நாகேஸ்வரன் ஆகியோர்களை அழைத்து

விசாரணை மேற்கொண்டேன். என்னுடைய விசாரணையில் மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கும் அவருடைய பாலிடெக்னிக் கல்லூரிகளுக்குமிடையே பண வரவு செலவு இருந்த விபரம் தெரிய வந்தது. இதுசம்பந்தமாக அவர்கள் அந்த கல்லூரியின் தாளாளரான மகேஸ்வரி பூவராகவனுடன் கலந்து பேசி 24.6.2015 தேதியில் மனுதாரரின் சார்பில் ஆஜரானவர்களும், எதிர்மனுதாரர்களும் அவர்களுக்குள் உள்ள கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக பேசி இறுதி முடிவு எடுப்பதாக முடிவு செய்து அதை எனக்கு எழுத்து மூலமாக தெரிவிப்பதாக 20.06.2015 அன்று தெரிவித்து எழுதிக்கொடுத்தார்கள். இது பணம் கொடுக்கல், வாங்கல் பிரச்சனை என்பதால் இருதரப்பினரும் எழுதிக்கொடுத்ததின்பேரில் 25.6.2015 அன்று விசாரணையை முடித்து என் உயர் அதிகாரரிகளுக்கு அறிக்கை சமர்ப்பித்தேன். மனுதாரர் தரப்பில் கொடுக்கப்பட்ட புகாரில் 5 வது நபராக வி.செல்வராஜ் என்பவர் கையெழுத்து போட்டுக்கொடுத்துள்ளாரா என்றால் கையெழுத்து போட்டுக்கொடுத்துள்ளார். தரப்பினர்கள் தங்களுக்குள் சமரசம் செய்து கொள்வதாக எழுத்து மூலமாக கொடுத்த கடிதத்தில் சொத்துக்களை விற்று தொகைகளை திருப்பி செலுத்திவிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி பழனிச்சாமி மற்றும் 40 நபர்களால் கொடுக்கப்பட்ட புகாரின் நகல் 3 தாள்களுடையது அது Ex.X1 ஆகும். அதில் மேற்படி தரப்பினர்கள் தங்களுக்குள் சமாதானம் செய்து கொள்வதாக எழுதிக்கொடுத்த கடிதத்தின் நகல் Ex.X2 ஆகும்.

**பிரதிவாதிகள் தரப்பிள் குவி**

என்னிடம் கொடுக்கப்பட்ட புகாரில் யார் யாருக்கு எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய தொகை தவிர அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் மற்ற நபர்களுக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்பட வேண்டும் என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை. நானும் அது பற்றி கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரி. என்ன என்ன ஆவணங்கள் அடிப்படையில் மனுதாரர்கள் தொகை கோருகிறார்கள் என்று நான் கேட்கவில்லை

என்றால் கேட்கவில்லை. மனுதாரர்களும் எந்த ஒரு ஆவணமும் என்னிடம் கொடுக்கவில்லை. எதிர்மனுதாரர்கள் நந்தகுமார்,நாகேஸ்வரன் ஆகியோர்களை அழைத்து மனுதாரர்களுக்கு அவர்கள் எவ்வளவு தொகை கொடுக்கவேண்டும் என்பதை குறித்து விசாரணை மேற்கொண்டேனா என்றால் நான் கேட்டதற்கு அவர்கள் கணக்குகளை பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் மகேஸ்வரி பூவராகவனை தனியாக விசாரிக்கவில்லை. எதிர்மனுதாரர்கள் புகார் கொடுத்த பழனிச்சாமியை தவிர மற்ற நபர்களுக்கு தொகை கொடுக்க வேண்டுமா இல்லையா என்பது குறித்து நான் விசாரிக்கவில்லை என்றால் நான் விசாரிக்கவில்லை. எதிர்மனுதாரர்கள் புகார்தாரருக்கு எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்று நான் விசாரிக்கவில்லை என்றால் விசாரிக்கவில்லை. நான் ஒவ்வொருவரையும் தனித்தனியாக விசாரித்திருந்தால் யார் யார் எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்பது பற்றி தெரியவந்திருக்கும் என்றாலும், நான் அவ்வாறு விசாரிக்காத காரணத்தினால் தான் எதிர்மனுதாரர்கள் யார் யாருக்கு எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்பது பற்றி என் விசாரணையில் இல்லை என்று சொல்வது சரியல்ல. என்னுடைய விசாரணையில் அவர்களுக்குள் இருக்ககூடிய சங்கதி கொடுக்கல், வாங்கல் பிரச்சனை மட்டுமே என்பதால் அது குறித்து நான் ஆழமாக மேற்கொண்டு விசாரிக்கவில்லை. நான் அவர்களை விசாரித்து ஆவணங்களை வாங்கி பார்த்திருந்தால் புகாரில் உண்மை தன்மை இல்லை என்பதும், ஆவணங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நான் ஆவணங்களை வாங்கி பார்க்காதது தான் என் விசாரணையின் குறை என்றால் சரியல்ல மறுக்கிறேன். நான் அவர்களிடம் ஆவணங்களை கேட்டிருந்தால் அவர்கள் என்னிடம் ஆவணங்களை கொடுத்திருப்பார்கள் என்றாலும் அவ்வாறு ஆவணங்களை கோருவதற்கு எனக்கு அதிகாரம் இருக்கிறது ஆனால் இந்த விசாரணையின் அன்று மேற்கொண்டு ஆவணங்களை கோரும் சூழ்நிலை இல்லாத காரணத்தினால் ஆவணங்கள் கேட்கவில்லை. நான் ஆவணங்களை சரிவர பார்க்காமல் புகார் மனுதாரர்கள் அவர்கள் வசம் இருந்த

ஆவணங்களை அதிக தொகைக்கு பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்ததற்கு நான் உறுதுணையாக இருந்தேன் என்று சொல்வதை நான் மறுக்கிறேன். அதனால் தான் புகாரில் யார் யார் எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர்கள், புகார்தாரருக்கு எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்று நான் விசாரணை செய்தேனா என்றால் நான் விசாரித்த போது எதிர்மனுதாரர்கள் தரப்பில் வந்த நபர்கள் புகார்தாரருக்கு ரூ.5 லட்சம் கொடுக்க வேண்டும் என்று என்னிடம் சொன்னார்கள். அது சம்பந்தப்பட்ட கணக்குகளையும் பார்க்க வேண்டும் என்று எதிர்மனுதாரர்கள் சொன்னார்கள். அவ்வாறு தொகை கொடுக்க வேண்டியது சம்பந்தமாக அவர்கள் எந்த ஆவணமும் என்னிடம் காட்டவில்லை என்றாலும், நான் அது குறித்து ஆவணங்களை அவர்களிடம் கேட்கவில்லை என்று சொன்னால் நான் ஆவணங்களை கேட்கவில்லை அவர்களும் காட்டவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வந்த நபர்கள் ரூ.5 லட்சம் கொடுக்க வேண்டும் என்று என்னிடம் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அந்த புகாரில் 5 ம் நபரான செல்வராஜ்க்கு புகாரின் எதிர்மனுதாரர்கள் எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்று நான் கேட்கவில்லை என்று சொன்னால் இல்லை.

கு.வி நிறைவுற்றது.